# செந்தமிழ் வளர்க்கும் சிந்தனைகள்

ந. சஞ்சீவி

# செந்தமிழ் வளர்க்கும் சிந்தனைகள்

**ந. சஞ்சீவி, எம். ஏ.,**
*தமிழ்த்துறைத் தலைவர்,*
*பச்சையப்பர் கல்லூரி, காஞ்சிபுரம்.*

விற்பனை உரிமை :

**பாரி நிலையம்**

முதற்பதிப்பு: செப்டம்பர், 1959
பாரதியார் திருநாள் வெளியீடு
உரிமை ஆசிரியர்க்கே.

## ஆசிரியரின் மற்ற நூல்கள்

★

**இலக்கியம்—கலை:**

சங்ககாலச் சான்றோர்கள்
காற்றிலே மிதந்தவை
சிலம்புத்தேன்
சிலப்பதிகார விருந்து
கவிஞர் தரும் காட்சி
உணர்வின் எல்லை
இயலிசை நாடகம்
தமிழ் நாடக வரலாறு
நாடகப் பேராசிரியர் நால்வர்

**வரலாறு:**

1806
வீரத் தலைவர் பூலித்தேவர்
இருபெருந் தலைவர்
மருதிருவர்
மானங்காத்த மருது பாண்டியர்
வேலூர்ப் புரட்சி
சிவகங்கைச் சிங்கங்கள்
கும்மந்தான் கான்சாகிபு
முதலில் முழங்கிய முரசு
வீரத் தமிழகத்தில் விடுதலை வேள்வி
வெள்ளையர் கண்ட தமிழ் வீரம்
விடுதலை இயக்க வரலாறு
வெள்ளை ஆதிக்க வரலாறு
போரும் வேரும்

★

முத்தமிழ் அச்சகம், காஞ்சிபுரம்.

★

தமிழ்

வளர்ச்சி

ஆராய்ச்சிக்

குழுவிற்கு

★

# அணிந்துரை

பேராசிரியர் திரு. ந. சஞ்சீவி அவர்கள் தமிழுலகத்துக்குப் புதியவர் அல்லர். சஞ்சீவி அவர்கள், இலக்கியம்பற்றியும், வரலாறுபற்றியும் எழுதியுள்ள நூல்களைத் தமிழுலகம் அறிந்திருக்கிறது. இப்போது, 'செந்தமிழ் வளர்க்கும் சிந்தனைகள்' என்னும் பெயருள்ள இச்சிறு நூலைச் சிந்தனைக்கு விருந்தாக அளித்திருக்கிறார். இந்நூல், தமிழ் நாட்டின் இலக்கியம், வரலாறு, கலை, பண்பாடு முதலியவற்றையும் புதிய கலைகளையும் ஆராய்ந்து செயலாற்றவேண்டிய ஆக்க வேலைகளைப்பற்றி யோசனை கூறுகிறது. தமிழ் மொழியை, தமிழர்களை அறிவுத் துறையில் வளர்ப்பதுபற்றி இந்நூல் கூறும் யோசனைகள் போற்றத்தக்கன; ஏற்கத்தக்கன; செயலாற்றத்தக்கன. இந்த ஆக்க வேலைகளைப் பற்றி நூற்றுக்கு மேற்பட்ட யோசனைகளை உடையது இந்நூல்.

பாரத தேசம் சுயஆட்சி பெற்ற பிறகு, நாடெங்கும் உணர்ச்சியும் எழுச்சியும் காணப்படுகின்றன. பாரத தேசத்திலே பற்பல மொழிகளைப் பேசுவோர், தத்தம் தாய் மொழியைப் பல்துறைகளிலும் வளப்படுத்த முயன்று செயலாற்றி வருகிறார்கள். ஒரு மொழியை வளப்படுத்துவது அம்மொழி பேசுகிற மக்களை வளப்படுத்துவதாகும். மொழியில் வளர்ச்சி இல்லையேல் மக்களில் வளர்ச்சி இல்லை என்பது மறுக்க முடியாத உண்மை. தமிழ் நாட்டிலும் மொழி வளர்ச்சிபற்றி ஓரளவு உணர்ச்சியும் எழுச்சியும் காணப்பட்டாலும், மற்ற மொழியாளருடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, நம்மவரின் ஊக்கமும் எழுச்சி

யும் குறைவானதுதான். இதற்குக் காரணம், பலருடைய ஒத்துழைப்பை ஒன்று சேர்த்துச் செயற்படுத்தும் வாய்ப்பு ஏற்படாததுதான்.

தமிழகத்தின் தலைநகரம் முதல் தொட்டிப்பட்டி வரையில் உள்ள எல்லாரும் தமிழ் வளர்ச்சிக்குப் பணிபுரிந்து தொண்டாற்ற ஆர்வங் கொண்டிருக்கிறார்கள். அரசாங்கத்திலே முன் அணியில் இருக்கிற அமைச்சர்கள் முதல் குக்கிராமத்தில் உள்ள தொண்டர்கள் வரையில் எல்லோரும் தமிழின் ஆக்கத்திற்கும் வளர்ச்சிக்கும் தம்மால் இயன்ற தொண்டு செய்ய ஆர்வத்துடன் இருப்பதைக் காண்கிறோம். ஆனால் இந்த ஊக்கத்தையும் உழைப்பையும் பயன் படுத்திச் செயலாற்றுகிற நிலையம் ஒன்று இல்லாத படியினாலே, இவை யாவும் பயன்படாமலே வீணாகப் போகின்றன. இத்துறையில், எல்லோருடைய அனுபவத்தையும் ஆராய்ச்சியையும் ஒன்று சேர்த்துப் பயன்படுத்த ஒரு நிலையம் இன்றளவும் ஏற்படவில்லை. இந்தத் தேவையை இந்நூல் சுட்டிக் காட்டுகிறது. இந்நூலில் கூறப்படுகிற யோசனைகளும் கருத்துக்களும் பகற்கனவல்ல; செய்ய முடியாதவை அல்ல; நிறைவேற்றக் கூடியவை; செய்யக் கூடியவையே.

இந்நூலிலே பல துறைகளைப் பற்றிய கருத்துக்களும் யோசனைகளும் கூறப்படுகின்றன. எல்லோருக்கும் எல்லாத் துறைகளிலும் ஆராய்ச்சியும் அனுபவமும் இருக்க முடியாது. ஆனால், ஒவ்வொருவரும் ஒவ்வொரு துறையில் பயிற்சியும் அனுபவமும் ஆராய்ச்சியும் பெற்றிருக்கக் கூடும். அவ்வத்துறையில் பயிற்சியும் அனுபவமும் பெற்றவர்கள் அவ்வத்துறை பற்றித் தமது கருத்தைத்

யும் குறைவானதுதான். இதற்குக் காரணம், பலருடைய ஒத்துழைப்பை ஒன்று சேர்த்துச் செயற்படுத்தும் வாய்ப்பு ஏற்படாததுதான்.

தமிழகத்தின் தலைநகரம் முதல் தொட்டிப்பட்டி வரையில் உள்ள எல்லாரும் தமிழ் வளர்ச்சிக்குப் பணிபுரிந்து தொண்டாற்ற ஆர்வங் கொண்டிருக்கிறார்கள். அரசாங்கத்திலே முன் அணியில் இருக்கிற அமைச்சர்கள் முதல் குக்கிராமத்தில் உள்ள தொண்டர்கள் வரையில் எல்லோரும் தமிழின் ஆக்கத்திற்கும் வளர்ச்சிக்கும் தம்மால் இயன்ற தொண்டு செய்ய ஆர்வத்துடன் இருப்பதைக் காண்கிறோம். ஆனால் இந்த ஊக்கத்தையும் உழைப்பையும் பயன் படுத்திச் செயலாற்றுகிற நிலையம் ஒன்று இல்லாத படியினாலே, இவை யாவும் பயன் படாமலே வீணாகப் போகின்றன. இத்துறையில், எல்லோருடைய அனுபவத்தையும் ஆராய்ச்சியையும் ஒன்று சேர்த்துப் பயன்படுத்த ஒரு நிலையம் இன்றளவும் ஏற்படவில்லை. இந்தத் தேவையை இந்நூல் சுட்டிக் காட்டுகிறது. இந்நூலில் கூறப்படுகிற யோசனைகளும் கருத்துக்களும் பகற்கனவல்ல; செய்ய முடியாதவை அல்ல; நிறைவேற்றக் கூடியவை; செய்யக் கூடியவையே.

இந்நூலிலே பல துறைகளைப் பற்றிய கருத்துக்களும் யோசனைகளும் கூறப்படுகின்றன. எல்லோருக்கும் எல்லாத் துறைகளிலும் ஆராய்ச்சியும் அனுபவமும் இருக்க முடியாது. ஆனால், ஒவ்வொருவரும் ஒவ்வொரு துறையில் பயிற்சியும் அனுபவமும் ஆராய்ச்சியும் பெற்றிருக்கக் கூடும். அவ்வத்துறையில் பயிற்சியும் அனுபவமும் பெற்றவர்கள் அவ்வத்துறை பற்றித் தமது கருத்தைத்

செல்கின்றனர். அதிலும் மேல் நாட்டினர் விஞ்ஞானத் துறையில் (ஆக்கத் துறையிலும் அழிவுத் துறையிலும்) செல்லும் வேகம் சொல்லும் தரத்தது அன்று. உலகத்தில் மற்ற மக்கள் இயங்கும் வேகத்தோடு தமிழ் நாடும் இயங்காமல் பின் தங்கி விடுமானால், தமிழா! உலக அரங்கத்தில் உன்நிலை என்ன என்பதைச் சிந்தித்துப் பார். மற்ற விஞ்ஞான வளர்ச்சிகள் இருக்கட்டும். எல்லா வளர்ச்சிக்கும் அடிப்படையான மொழி வளர்ச்சியைக்கூட, இன்னம் செய்யத் தொடங்காமல் இருக்கிறாய். உடனே உன் ஆக்க வேலையைச் செயற்படுத்து. செயற்படுத்துவாயானால், மற்ற வளர்ச்சிகள் எல்லாம் தாமே வந்து அமைந்துவிடும்.

'செந்தமிழ் வளர்க்கும் சிந்தனைகள்' என்னும் இந்நூல் படிப்பவரின் சிந்தனையைத் தூண்டிவிடும் என்பதில் ஐயமில்லை. தமிழ் வளர்ச்சிக்கு இன்றியமையாத அடிப்படையான கருத்துக்களை இந்நூல் கூறுகிறது. தகுந்த காலத்தில் இந்நூலை உதவிய திரு. சஞ்சீவி அவர்களுக்கு எமது நன்றி உரியது. இந்நூலைப் படிக்கும் ஒவ்வொருவரும் அவரவர்களுக்கு விருப்பமான துறையில் ஆராய்ந்து தமிழை வளர்ப்பாராக.

**வாழ்க தமிழகம்!** **வளர்க தமிழ் மொழி!**

மயிலாப்பூர், சென்னை.
25—8—59

**சீனி. வேங்கடசாமி**

# முன்னுரை

சிந்தனையே வாழ்வு. நம் வாழ்வினும் நம் தாய் மொழியின் வாழ்வு நனி சிறந்தது.

நாளும் என் நெஞ்சில் செந்தமிழ் வளர்க்கும் சிந்தனைகளே, 'செந்தமிழ் வளர்க்கும் சிந்தனைகள்' என்னும் தலைப்பில் ஒன்று திரண்டு நூலுருவம் பெற்றுள்ளன. இந்நூல் முற்ற முடிந்த முழுமை உடையது அன்று; புதிய பாதையில் முதல் முயற்சி; அவ்வளவுதான். 'செந்தமிழ் வளர்க்கும் சிந்தனை' களுக்கு என்றும் எவரும் எல்லை கோல இயலாது.

இந்நூல் ஆராய்ச்சிப் பேரறிஞர், மயிலை—சீனி—வேங்கடசாமி அவர்களின் அணிந்துரையால் பெருமை பெற்றுள்ளது. தமிழ்த்தாயின் தவப் புதல்வராய அப்பெருந்தகையார்க்கு யான் பெரிதும் கடமைப்பட்டுள்ளேன்.

வழக்கம்போல இந்நூலைச் செப்பம் செய்துதவிய மகாவித்துவான், **மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை** அவர்கள் அருளுடைமைக்கு என்றும் நன்றியுடையேன்.

ஒரு எளிய தமிழ்க் குழந்தையின் இனிய மழலை மொழிகள் என்று கருதி, தாய் தந்தையரின் அருள் உள்ளத்தோடு தமிழுலகம் இந்நூலை ஏற்றுப் போற்றிப் பயன் கொள்ள இறைஞ்சுகிறேன்.

**வாழிய செந்தமிழ் !**

**11–9–'59.** **ந. சஞ்சீவி.**

# செந்தமிழ் வளர்க்கும் சிந்தனைகள்

## I. தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சிக் குழு

1. தமிழ் நாட்டின் தலைநகராய சென்னையில் அரசாங்க ஆதரவுடன் தமிழ்நாட்டுக் கல்வி அமைச்சர் அவர்கள் தலைமையில் நிறுவப்பெற்றுள்ள 'தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சிக் குழு'விற்கு ஒரு நிலையான அலுவலகம் சென்னையில் இருக்க வேண்டும்.

2. தமிழ் ஆசிரியர்களும், அறிஞர்களும், அன்பர்களும் அந்த அலுவலகத்திற்கு அனுப்பும் ஒவ்வொரு யோசனையும் 'யோசனைகள் பட்டியலி'ல் (Register of Suggestions) பதிவு செய்யப்பெற்று அவைபற்றி அவ்வப்போது ஆலோசிக்கப்பெற வேண்டும்.

3. 'தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சிக் குழு' தமிழ் அறிஞர்கள் எந்த எந்தப் புதிய தலைப்புக்களில் ஆராய்ச்சிகள் நடத்த வேண்டும் என்பதை அவ்வப்போது ஆராய்ந்து வழி காட்ட வேண்டும்.

4. தமிழ் ஆராய்ச்சி பற்றிப் பல்கலைக் கழகங்கட்கு இடையே இணைப்பான முயற்சி ஏற்பட வழி வகைகள் செய்ய வேண்டும்.

5. உடனடியாக ஆராய்ச்சி செய்யப்பெற வேண்டிய பொருள்களைப் பகிர்ந்துகொண்டு பல்வேறு அறிஞர்களும் நிலையங்களும் ஆராய்ச்சிப் பணியில் ஈடுபட வேண்டும்.

6. மாவட்டத் தண்டலர் (Collector) துணைத் தண்டலர், தாசில்தார்கள், கிராமமுனிசீபுகள் ஆகியோர் தங்கள் தங்கள் ஆட்சி எல்லையில் கிடைக்கும் சிற்பங்கள்—காசுகள் — கல்வெட்டுக்கள் — சாசனங்கள் — பழமொழிகள்—நாடோடிப் பாடல்கள் முதலியன பற்றிய தகவல்களை அவ்வப்போது ‘தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சிக் குழு’விற்குத் தெரிவிக்க வேண்டும். அவ்வாறு தெரிவிக்கப்படும் தகவல்களைத் தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சிக் குழுவின் அலுவலகம் ‘செய்திப் பதிவுச் சுவடி’ (Register of Information) ஒன்றில் பதிவு செய்து கொண்டு, அவற்றைப்பற்றித் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## II. பட்டியல்கள் உருவாக்கும் பணி

தமிழ் மொழி—இலக்கிய—நாட்டு வரலாறுகளை வரையப் பல சிறந்த தோற்றுவாய்களை (Sources) உருவாக்க வேண்டும். இன்றியமையாதனவாகப் பின்வரும் சில விளக்கப் பட்டியல்களையேனும் (Descriptive catalogues) தமிழில் தொகுக்க வேண்டும்.

1. ஆதிநாள் தொட்டு இந்நாள் வரை வெளி வந்துள்ள தமிழ் நூல்கள்.

2. தமிழ் (Tamiliana) பற்றி ஆங்கிலத்திலும் பிற மொழிகளிலும் வெளி வந்துள்ள நூல்களும் கட்டுரைகளும்.

3. கடந்த பல தலைமுறைகளாகத் தமிழ் இதழ்களில் வெளி வந்துள்ள ஆராய்ச்சிக் கட்டுரைகள்—குறிப்புக்கள்.

4. தஞ்சைச் சரசுவதி மகால் போன்ற பழமையான பொது நூல் நிலையங்களில் உள்ள ஏடுகள், அச்சிட்ட நூல்கள்.

5. தமிழ் நாட்டில் தனிப்பட்டவர் நிருவாகத்தில் உள்ள நூல் நிலையங்களில் உள்ள ஏடுகள், அச்சிட்ட நூல்கள்.

6. தமிழ் நாட்டு மடாலயங்களில் உள்ள ஏடுகள், அச்சிட்ட நூல்கள், சாசனங்கள் முதலியன.

7. இந்தியாவில் உள்ள பல்வேறு நூல் நிலையங்களிலும் தமிழ் (Tamiliana) பற்றிக் கிடைக்கும் ஏடுகள், அச்சிட்ட நூல்கள்.

8. அயல் நாட்டு நூல் நிலையங்களில் உள்ள தமிழ் பற்றிய ஏடுகள், அச்சிட்ட நூல்கள்.

[இவற்றைத் தொகுக்கச் சிறந்த தமிழ் அறிஞர் குழு ஒன்றை அமைத்து, எல்லா வசதிகளுடனும் உலகில் உள்ள பல நாட்டு நூல் நிலையங்களையும் சுற்றிப் பார்க்க வழிவகை செய்ய வேண்டும். பழமையாக உள்ள சுவடிகளைப் பிரதி செய்ய அல்லது ஒளிப்படம் (Micro Film) எடுக்க ஆவன புரிய வேண்டும்.]

9. சென்னை ஆவணக்களரியில் (Records Office) உள்ள பழைய ஆவணங்களைப் பற்றிய குறிப்பேடு (Guide to Records) முற்றிலும் தயாரிக்க வேண்டும்.

10. தமிழக மாவட்டம் ஒவ்வொன்றிலும் உள்ள பேரூர், சிற்றூர்களின் பெயர்களை அகர வரிசைப்படுத்தித் தொகுக்க வேண்டும்.

11. தமிழகத்திற்கு அப்பால் உள்ள பகுதிகளில்—சிறப்பாகத் தென்னகம், இலங்கை, கிழக்கு நாடுகளில்—தமிழோடு தொடர்புடையனவாய் இருக்கும் ஊர்ப் பெயர்களைத் தொகுக்க வேண்டும்.

(‘ஊரும் பேரும்’ பற்றிய ஆராய்ச்சிக்கு இப்பட்டியல்கள் பயன்படும்.)

12. இது வரை தமிழ் மொழியில் வெளி வந்துள்ள சிறந்த இதழ்களும் அவை பற்றிய விளக்கங்களும் கொண்ட ஒரு பட்டியல் தொகுக்க வேண்டும். இது ‘தமிழ் நாட்டில் இதழ் வளர்ச்சி’ பற்றிய ஆராய்ச்சிக்குப் பெருந்துணை புரியும்.

13. தமிழ் நாட்டுப் பத்திரிகைகளில் இது வரை வெளி வந்துள்ள தமிழ் இலக்கியம், வரலாறு முதலியன பற்றிய கட்டுரைகளைப் பற்றிய பட்டியல் தொகுக்க வேண்டும்.

## III. ஆராய்ச்சி நூல் நிலையம்

தமிழ் ஆராய்ச்சிக்கென்றே பயன்படும் வகையில் ஓர் 'ஆராய்ச்சி நூல் நிலையம்' சென்னையில் ஏற்பட வேண்டும். அந்நூல் நிலையத்தில் இது வரை தமிழ் சம்பந்தமாக வெளி வந்துள்ள எல்லாச் சுவடிகளும், நூல்களும் இடம் பெற வேண்டும். எந்த நூலும் சுவடியும் நூல் நிலையத்தில் வைத்து ஆராயப்பட வேண்டுமே அன்றி, வெளியில் எடுத்துச் செல்ல எக்காரணத்தாலும் அனுமதித்தல் கூடாது. ஆங்கிலத்தில் 'Reference Library' என்று வழங்கப் பெறும் (பார்வை ஏடகமாக) நூல் நிலையமாக அது இலங்க வேண்டும்.

## IV. பொருட்காட்சி நிலையம்

நூல் நிலையத்தைப் போன்றே 'கலைப் பொருட்காட்சி நிலையம்' ஒன்று நிறுவப்பெற வேண்டும். அதில் தமிழ் நாட்டுச் சிறப்புச் செல்வங்களும், ஓவியச் செல்வங்களும், நாணயங்களும், மற்றக் கலைப்பொருள்களும் நேராகவோ படங்கள் வாயிலாகவோ தொகுத்து வைக்கப் பெற வேண்டும்.

## V. தாவரப் பூங்கா (Botanical Gardens)

பழந்தமிழ் இலக்கிய நூல்களிலும் மருத்துவ நூல்களிலும் பயின்று வந்துள்ள மரங்கள் மலர்களுள் பலவற்றை இப்போது சரியாக அறிந்துகொள்ளக் கூடவில்லை. அத்தாவர வகைகளை விளக்கிக் காட்டும் வகையில் ஒரு பூங்கா நிறுவுவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

## VI. பழந்தமிழ் ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் நூல்களையும் புதுப்பித்தல்

1. (1) தமிழியன் ஆண்டிக்கொரி (Tamilian Antiquary), (2) இந்தியன் ஆண்டிக்கொரி (Indian Antiquary), (3) சித்தாந்த தீபிகை, (4) செந்தமிழ், (5) கலைமகள் முதலான பல்வேறு வெளியீடுகளிலும் தமிழ்த் தொடர்புடையனவாக முன்னர் வெளி வந்துள்ள ஆராய்ச்சிக் கட்டுரைகளை முறைப்படுத்தித் தொகுத்துத் தக்க விளக்கக் குறிப்புக்களுடன் வெளியிட வேண்டும்.

2. தமிழக வரலாற்றுத் தொடர்புடையனவாய் உள்ள பல நூல்கள் சென்னை நூல் நிலையங்களில் சிதைந்தழியும் நிலையில் உள்ளன. எடுத்துக்காட்டாக (1) History of the Madras

Army, (2) Madras Engineers, (3) Manual of Madras administration என்னும் நூல்களைக் குறிப்பிடலாம். இவற்றைப் புதிய விளக்கக் குறிப்புக்களுடன் பதிப்பித்தல் வேண்டும்.

3. மேற்குறிப்பிட்ட நூல்களைத் தமிழிலும் மொழி பெயர்த்து வெளியிட வேண்டும்.

4. கிறிஸ்தவப் பாதிரிமார்கள் 16, 17-ஆம் நூற்றாண்டுத் தமிழகம் பற்றித் தங்கள் மேல் அதிகாரிகட்கு வரைந்துள்ள கடிதங்கள் தமிழக வரலாற்றிற்குப் பெரிதும் பயன் படுவன. எனவே, பிரெஞ்சு மொழியில் உள்ள அக்கடிதங்கள் ஆங்கிலத்திலும் தமிழி லும் மொழி பெயர்க்கப்படல் வேண்டும்.

5. ஆனந்தரங்கம் பிள்ளை நாட்குறிப்பு ஓர் அரிய தமிழ்ச் செல்வம்; வரலாற்றுக் கரு வூலம். அத்தகைய நூல் தமிழில் அது ஒன்றே. அந்நூல் நன்முறையில் பதிப்பிக்கப் பெற வேண்டும்.

## VII. கல்வெட்டு—பட்டய—ஆராய்ச்சி

1. தமிழறிவு சான்ற கல்வெட்டு நிபுணர் குழு ஒன்று நிறுவி, அக்குழு கல்வெட்டு, புதை பொருள், அறநிலையப் பாதுகாப்பு ஆகிய கழகங்களின் துணைகொண்டு, முன்னரே

வெளியிடப் பெற்றுள்ள கல்வெட்டுக்களையும் இதுகாறும் வெளியிடப்பெறாத கல்வெட்டுக் களையும் ஆராய்ந்து, ஏற்ற குறிப்புக்களுடன் காலமுறைப்படி தொகுதி தொகுதியாகப் பதிப்பிக்க வேண்டும்.

2. தமிழ்நாட்டுக் கல்வெட்டுக்களில் பயின் றுள்ள சொற்களுக்கு விளக்கக் குறிப்புக்களு டன் ஓர் அகராதி தயாரிக்கப்பட வேண்டும்.

3. தமிழ் நாட்டுக் கல்வெட்டுக்களில் உள்ள கவிதைகள் அனைத்தையும் தொகுத்து விளக்கக் குறிப்புக்களுடன் நூலுருவில் வெளி யிட வேண்டும்.

4. இது வரை வெளிவந்துள்ள தமிழ் நாடு சம்பந்தப்பட்ட 'கல்வெட்டு அறிக்கைகள்' (Epigraphical Reports) தக்க அடிக்குறிப்புக் களுடன் பதிப்பிக்கப் பெற வேண்டும்.

5. தமிழ் நாட்டுச் செப்புப் பட்டயங்கள் பலவும் புகைப்படங்கள் எடுக்கப்பெற்றுத் தக்க விளக்கக் குறிப்புக்களுடன் நூல்வடிவில் வெளி யிடப் பெறவேண்டும்.

## VIII. பழம்பொருள் — புதைபொருள் — ஆராய்ச்சி

1. கல்வெட்டு—புதைபொருள் துறை, ஒரு குக்கிராமத்தையும் விடாது ஆராய்ந்து ஆங்காங்குள்ள கல்வெட்டுக்களைப் பிரதிசெய்ய வேண்டும். வயலோரங்களிலும் வெட்ட வெளிகளிலும் வெயிலிலும் மழையிலும் அடிபட்டுக் கிடக்கும் பழம்பொருள்களை—கலைப்பொருள்களை—சிற்பச் செல்வங்களைச் சேகரித்துச் சென்னைப் பொருட்காட்சிச்சாலை அல்லது கலைப்பொருள் கூடத்தில் இடம் பெறச் செய்ய வேண்டும்.

2. தமிழ் நாட்டில் புதைபொருள் ஆராய்ச்சி போதுமான அளவிற்கு நடைபெற வில்லை. அக்குறை தீரப் பழம்பெருந்தலைநகர்கள்—துறைமுகப் பகுதிகள்—இருந்த இடங்களையேனும் தோண்டிக் காணும் முயற்சி உடனே தொடங்கப் பெற வேண்டும்.

3. தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சிக் குழு நாளிதழ்களில் அறிக்கை விட்டுப் பழங்கலைப் பொருள்கள் புதைந்திருக்கக் கூடிய இடங்களைப் பற்றித் தகவல் அளிப்பவர்கட்குப் பாராட்டும் பரிசும் வழங்க வேண்டும்.

4. தமிழ் நாட்டில் கண்டெடுக்கப் பெற்றுள்ள கல்வெட்டுக்கள், சாசனங்கள், நாணயங்

கள் யாவும் புகைப்படங்கள் எடுக்கப் பெற்றுத் தக்க விளக்க—ஆராய்ச்சிக் குறிப்புக்களுடன் வெளியிடப் பெற வேண்டும்.

5. தமிழ் நாட்டில் பல்வேறு இடங்களிலும் தூர்ந்து கிடக்கும் சுருங்கை வழிகளைத் துருவி ஆராய்தல் வேண்டும்.

## IX. விஞ்ஞானத்தின் துணையால் பழங்கலைச் செல்வங்களைப் பாதுகாத்தல்

இக்காலத்தில் வளர்ந்திருக்கும் விஞ்ஞான வசதிகளைப் பயன்படுத்திக்கொண்டு தமிழ் வளர்ச்சிக்குப் பெருந்தொண்டாற்றலாம். எடுத்துக்காட்டாக:

1. தமிழ் பற்றி வெளி வந்துள்ள பழமையான சிறந்த பல ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் நூல்களையும் தேடித் திரட்டி அவற்றைத் தொகுத்து முறைப்படுத்தித் தொகுதி தொகுதியாக வெளியிட வேண்டும். நொறுங்கிப் போகும் நிலையில் உள்ள நூல்களைப் புதிதாகப் பதிப்பிக்க முடியாவிட்டால் ஒளிப்படம் (Micro Film) எடுத்துப் பாதுகாக்க வேண்டும். பாதுகாக்க முடியாத பழைய ஏட்டுச்சுவடிகளையும் ஒளிப்படம் (Micro Film) எடுத்துப் பாதுகாக்க வேண்டும்.

2. 'தமிழ் நாட்டுச் சிற்பங்கள்' என்னும் தலைப்பில் தமிழ் நாட்டுக் கோயில்களில் உள்ள சிற்பங்கள் அனைத்தையும் புகைப்படம் எடுத்து விளக்கக் குறிப்புக்களுடன் நூலுருவில் வெளியிட வேண்டும்.

3. 'தமிழ் நாட்டுக் கோயில்கள்' என்னும் தலைப்பில் ஒவ்வொரு கோயிலின் அமைப்பைப் பற்றிய வரைப்படங்களும் (Plans), கோயிலின் பல்வேறு காட்சிகளையும் புலப்படுத்தும் புகைப் படங்களும் கொண்ட நூற்றொகுதிகளை வெளியிடல் வேண்டும்.

4. 'தமிழ் நாட்டு ஓவியங்கள்' என்ற தலைப்பில் ஆங்காங்குக் காணப்பெறும் பழைய ஓவியங்களைப் புகைப்படம் எடுத்து, விளக்கக் குறிப்புக்களுடன் நூலுருவில் வெளியிட வேண்டும்.

5. 'தமிழ் நாட்டு அணிகள்' என்னும் தலைப்பில் தமிழ் நாட்டுக் கோயில்களிலும் குறுநிலக் கிழார்கள் வீடுகளிலும் உள்ள பழங்கால அணிகளைப் புகைப் படங்கள் எடுத்து விளக்கக் குறிப்புக்களுடன் வெளியிட வேண்டும்.

6. 'தமிழ் நாட்டுப் போர்க்கருவிகள்' என்னும் தலைப்பில் பழங்காலத்துப் போர்க்கருவிகளாய் இன்றும் திருநெல்வேலி இராமநாதபுரம் முதலிய மாவட்டங்களில் கிடைப்பனவற்றைத்

தொகுத்துக் கலைப்பொருட்காட்சிச் சாலை களில் அமைக்க வேண்டும்; புகைப்படங்கள் எடுத்தும் நூலாக வெளியிட வேண்டும்.

7. தமிழ் நாட்டுக் கோவில்களிலும் கிராமங்களிலும் கிடைக்கும் பழங்காலத்து விளக்குகளையும் பாத்திரங்களையும் பண்டங் களையும் தொகுக்க வேண்டும். அவற்றை அவ்வப்போது புகைப்படங்கள் எடுத்து நூலுரு வில் வெளியிட வேண்டும்.

8. 'தமிழ்க் கலைப்பொருட்காட்சிச்சாலை'யின் சார் பில் ஆண்டுக்கொரு முறையேனும் ஓர் ஆராய்ச்சி மலர் வெளியிடப்பெற வேண்டும். அதில் கலைப்பொருள் பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரைகள் இடம் பெறல் வேண்டும்.

9. தமிழ் நாட்டுப் பேரூர்கள், இலக்கிய வரலாற்றுப் புகழ் பெற்ற இடங்கள், மலைகள், ஆறுகள், கோட்டைகள் முதலியவற்றின் பல்வேறு நலங்களும் துலங்கும் வகையில் அந்த இடங்களைப் படமெடுத்து நூலாகவும் திரைப்படமாகவும் வெளியிட வேண்டும். தக்க இடங்களில் வானவெளியில் இருந்து படங்கள் எடுப்பது பயனளிக்கும்.

10. தமிழ் நாட்டுத் திருவிழாக்களையும், நிழலாட்டம், பாவையாட்டம் முதலிய பொழுது

போக்கு நிகழ்ச்சிகளையும், சந்தை, மஞ்சிவிரட்டு முதலிய கிராமியக் காட்சிகளையும், பல்வேறு கோவில் விழாக்களையும் திரைப்படங்களாக்கி வெளியிட வேண்டும்.

11. ஏற்றப்பாட்டு, வில்லுப்பாட்டு முதலியனவும் பல்வேறிடங்களிலும் பேசப்படும் வித விதமான பேச்சுக்களும் ஒலிப்பதிவு செய்யப் பட்டு ஆராய்ச்சி செய்யப்பெற வேண்டும்.

12. தமிழ் நாட்டில் இசைத்தட்டு யுகம் தொடங்கியதும் பல இசை வல்லுனர்கள் இசைத்தட்டுக்களில் தங்கள் பாட்டைப் பதிவு செய்துகொள்ள அனுமதி அளித்தனர். அவ் விசைத் தட்டுக்கள் வாயிலாகப் பல பழைய பண்முறைகளை அறிந்துகொள்ள வாய்ப்புக் கிடைக்கிறது. எனவே, அவ்விசைத்தட்டுக் கள் அழிந்து போகாமல் காக்கப் பெற வேண்டும்.

13. திரைப்பட உதவியால் ஷேக்ஸ்பியர் நாடகங்களைப் படம் எடுத்திருப்பது போல, பழந்தமிழ் இலக்கியங்களை அக்காலச் சூழ் நிலை அமையப் படம் எடுக்க வேண்டும்.

14. தமிழ் மொழியில் உள்ள பல்வேறு சமயங்களைச் சார்ந்த பத்திப்பாடல்களையும் தக்கவர்களைக் கொண்டு பாடச் செய்து, இசைத் தட்டுக்களாக்கி, மக்கள் பயன் படுத்திக்கொள்ளச் செய்தல் வேண்டும்.

## X. தமிழ் ஆராய்ச்சியாளர்க்கு உதவிநிதி வழங்கல்

1. 'தமிழ் ஆராய்ச்சி வளர்ச்சிக் குழு' வாயிலாக அரசாங்கமும் பல்கலைக் கழகமும் ஆராய்ச்சியாளர்கட்கு உதவிநிதி வழங்கி, அவர்கள் தனிப்பட்ட முறையில் சுதந்தரமாக ஆராய்ச்சிகள் நடத்தி நூல்கள் இயற்றச் செய்ய வேண்டும்.

2. தேசியப் பேராசிரியர்கள் (National Professors) வரிசையில் தமிழ் ஆராய்ச்சி அறிஞர்கட்கும் இடம் தர வேண்டும்.

## XI. 'எது? யாது?' வெளியீடு

ஒவ்வொரு மாவட்டத்திற்கும் 'எது? யாது?' (What is What?) வெளியீடு ஒன்று தயாரிக்க வேண்டும். அதில் ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள புகழ் பெற்ற முக்கிய ஊர் ஒவ்வொன்றிற்கும் செல்லும் வழி, அங்குள்ள சிறப்புக்கள் முதலியன குறிக்கப் பெற வேண்டும்.

## XII. மாவட்ட அறிக்கைகள் (District Gazetteers)

1. வெள்ளையர் ஆட்சிக் காலத்தில் ஆங்கிலத்தில் வெளியிடப்பெற்றது போல இப்போது

கிடைத்துள்ள புதிய விவரங்களோடு மாவட்ட அறிக்கைகள் (Gazetteers) தமிழில் உருவாக்கி வெளியிடப் பெற வேண்டும்.

2. பழைய ஆங்கிலக் கெசட்டீர்களில் உள்ள முக்கியப் பகுதிகள் மறுபதிப்பாக அச்சிடப் பெற வேண்டும்.

## XIII. இலக்கிய இலக்கணப் பதிப்புக்கள்

1. தமிழ் இலக்கிய இலக்கணச் செல்வங்கள் அருஞ்சொற்குறிப்புக்களுடன் தக்க வகையில் பதிப்பிக்கப்பெற்று ஒரே வடிவான பதிப்புக்களாக (Uniform Editions) வெளியிடப்பெற வேண்டும்.

2. பல்வேறு உரைகளை உடைய இலக்கிய இலக்கண நூல்களின் எல்லா உரைகளையும் ஒரு சேரக் கொண்ட சிறந்த பதிப்புக்கள் வெளியிடப் பெற வேண்டும்.

3. பள்ளுப் பிரபந்தங்கள், குறவஞ்சி நூல்கள், அந்தாதிகள், கலம்பகங்கள், பிள்ளைத் தமிழ் நூல்கள் என்று வரிசைப்படுத்திப் பல்வேறு தமிழ் இலக்கியங்களையும் பதிப்பிக்க வேண்டும்.

## XIV. புது வகை ஆராய்ச்சி நூல்களும் நவீனங்களும்

1. தமிழ் நாட்டின் நிலவளம், மலைவளம், கடல்வளம், சுரங்கவளம், கைத்தொழில் வளம் முதலியன பற்றிப் புள்ளி விவரங்களுடன் தனித்தனி ஆராய்ச்சி நூல்கள் வெளியிடப் பெற வேண்டும்.

2. தமிழ் நாட்டு மரங்கள், மலர்கள், செடிகள், கொடிகள், பறவைகள், விலங்குகள் முதலியன பற்றி இலக்கிய விஞ்ஞான நோக்குடன் தனித்தனி ஆராய்ச்சி நூல்கள் வெளியிடப் பெற வேண்டும்.

3. தர்ஸ்டன் (Thurston) போன்ற பெருமக்கள் முன்னரே செய்துள்ள ஆராய்ச்சியின் துணை கொண்டு தமிழ் நாட்டுச் சாதிகள் குழுக்கள் பற்றி ஆராய்ச்சி நூல்கள் வெளியிடப் பெற வேண்டும்.

4. தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குப் புது வகை நவீனங்கள் மிகவும் இன்றியமையாதன. தமிழகத்தின் இயற்கை வளங்களையும் வட்டார வழக்குகளையும் பல்வகை வாழ்க்கைக் கூறுபாடுகளையும் நுணுக்கமாய்க் காட்டும் வகையில் புதிய நவீனங்கள் அமைய வேண்டும். கற்பனைக்கும்

கருத்திற்கும் கதையமைப்பிற்கும் தரப்படு
சிறப்பினும் நூறு மடங்குச் சிறப்பு பாத்தி
அமைப்புகட்கும் (Characterisation) வாழ்
கைப் பண்புகட்கும் தரப்படல் வேண்டும்.

## XV. தமிழைப்பற்றி இந்திய உலகமொழிகளில் வெளி வரும் குறிப்புக்களின் தொகுப்பு

1. தமிழ் மொழி, இலக்கியம், தமிழ் நா
இவை பற்றிப் பண்டு தொட்டு இன்று வ
தமிழரல்லாத இந்திய–ஆசிய–உலக–நல்லறிஞ
கள் வெளியிட்டுள்ள குறிப்புக்கள் தக்க விள
கங்களுடனும் அடிக்குறிப்புக்களுடனும் வெ
யிடப் பெற வேண்டும்.

2. ஆண்டுதோறும் இந்திய மொழி இத
களிலும் உலக மொழி இதழ்களிலும் தமிழ்
தொடர்புடையனவாய் வெளி வரும் கட்டுரை

## XVI. இலக்கியச் சொல் ஆராய்ச்சி

தமிழ் இலக்கியத்தைப் பல்வேறு காலக் கூறுகளாகப் பகுத்துக்கொண்டு ஒவ்வோர் இலக்கியத்திற்கும் சொல்லகராதியைத் தக்க விளக்கங்களுடன் தயாரிக்க வேண்டும்.

## XVII. பொது மக்கள் நூல்கள்

பல்வேறு முக்கியப் பொருள்கள் பற்றியும் தமிழில் ஒரே வடிவான 'பொதுமக்கள் நூல்கள்' (Popular books) வெளிவர ஏற்பாடு செய்ய வேண்டும்.

## XVIII. ஆட்சி மொழித் துறையில் தமிழ்

1. ஆட்சித் துறையில் தமிழ் அடைந்துள்ள முன்னேற்றம் பற்றி ஒவ்வோர் ஆண்டும் 'தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்றம்' ஆராய்ந்து, அறிக்கை வெளியிட வேண்டும்.

2. அந்த அறிக்கை கடந்த ஆண்டில் அத்துறையில் காணப்பட்ட குறைகளைக் குறிப்பிடுவதோடு, வரும் ஆண்டில் அக்குறைகள் நீங்கிப் புதிய முன்னேற்றங்கள் ஏற்பட வழி வகைகளையும் கூற வேண்டும்.

3. ஆட்சி மொழித் துறையில் நல்ல தமிழ்ச் சொற்களைப் பிறை வளைவுகளுள் (Brackets) அமைத்து, அவை நடை முறையில் பயனுறாத நிலையில் இருக்கும் கேட்டை அகற்ற வேண்டும்.

4. தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சிக் குழு விற்கு மாநில ஆட்சி மொழி ஆணையாளர் ஒவ் வோர் ஆண்டும் தம் துறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் பற்றியும் மேலும் முன்னேற்றம் அடைதற்குரிய வழி வகைகள் பற்றியும் அறிக்கை ஒன்றை ஒப்படைக்க வேண்டும். அந்த அறிக்கையை ஆய்ந்து தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சிக் குழு, மாநில ஆட்சி மொழி ஆணை யாளர் கருத்துக்களை நிறைவேற்ற ஆவன புரிய வேண்டும்.

## XIX. ஆலயங்களில் தமிழ்க்கலை ஆராய்ச்சி

1. படிப்படியாக ஆலயங்களில் தமிழ் வழி பாடு நிகழ்வதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

2. கோயில்களைப் புதுப்பிக்கும் வேலைகள் எச்சரிக்கையோடு நடைபெற வேண்டும். பழ மையான சிற்பச் செல்வங்கட்குச் சேதம் விளை யாமல் இருக்க, ஏற்கெனவே செய்யப் பெற் றுள்ள ஏற்பாடுகள் நடைமுறையில் ஈடேறப் புதிய வழி வகைகள் காணப்பெற வேண்டும்.

3. அறநிலையப் பாதுகாப்புக் கழகம் தனி ஆராய்ச்சிப் பிரிவு ஒன்றை ஏற்படுத்திக் கோயில்களில் உள்ள பழைய ஆவணங்களைப் பரிசீலனைசெய்து அவற்றிலிருந்து வரலாற்றுக் குறிப்புக்களைச் சேகரித்து வெளியீடுகளாக வெளியிட வேண்டும்.

4. கோயில்களின் அமைப்பிலும், கோயிற் சிற்பங்களைப் பற்றிய ஆராய்ச்சியிலும் அறநிலையப் பாதுகாப்புக் கழகத்தின் ஆராய்ச்சிப் பகுதி ஈடுபட வேண்டும்.

5. கோயிற் குளங்களில் அமிழ்ந்து கிடக்கும் சிலைகளை வெளிப்படுத்த வேண்டும்.

## XX. தமிழ் நாட்டு வண்ணப்படத் தொகுப்பு

தமிழகம் பற்றிய (இயற்கை, கலையியல் பொருளியல் முதலிய) விளக்கங்களைத் தரும் ஒரு வண்ணப்படப் பட்டியல் (A Pictorial Atlas) தயாரிக்கப்பெற வேண்டும்.

## XXI. தமிழ்ச் செல்வர்களது கடமை

தமிழ் நாட்டுச் செல்வர்கள் தமிழாராய்ச்சிக்கான அமைப்புக்களை ஏற்படுத்துவதிலும் நன்கொடைகள் வழங்குவதிலும் கருத்துச் செலுத்த வேண்டும்.

## XXII. ஆண்டு நூல்

ஆண்டுதோறும் தமிழ் நூல்களின் ஆண்டு நூல் (year book) ஒன்று வெளியிடப் பெற வேண்டும். அதில் அகர வரிசையில் தமிழ் எழுத்தாளர் ஒவ்வொருவரும் அந்த அந்த ஆண்டில் வெளியிடும் சிறுகதைகள், கட்டுரைகள், நாவல்கள், கவிதைகள் முதலியன பற்றிய விவரங்களைப் பிரசுரிக்க வேண்டும்.

## XXIII. பிற நாடுகள், இனங்கள், இலக்கியங்கள் பற்றிய தமிழ் நூல்கள்

1. இந்திய தேசிய இனங்கள் பற்றியும், உலக நாடுகளில் உள்ள இனங்கள் பற்றியும் தனித்தனியே அந்த அந்த இனங்களின் பொது வரலாறும் சிறப்பும் பற்றிய ஒரே வடிவான வரலாற்று நூல்கள் தமிழில் வெளியிடப் பெற வேண்டும்.

2. பிறமொழிகள், இலக்கியங்கள் பற்றித் தமிழில் ஒரே வடிவான வரலாற்று நூல்கள் வெளியிடப்பெற வேண்டும்.

## XXIV. தமிழ் மொழி—தமிழ் இலக்கிய—தமிழ் நாட்டு வரலாறுகள்

1. *தமிழ் மொழி வரலாறு, தமிழ் இலக்கிய வரலாறு, தமிழ் நாட்டு வரலாறு — இவை மூன்றும் பல்வேறு கோணங்களிலிருந்து விரிவாக ஆராயப்பெறத் தனித்தனி நிபுணர் குழு நிறுவப்பெற வேண்டும். அக்குழுக்கள் தமிழ் மொழியின் — தமிழ் இலக்கியத்தின் — தமிழ் நாட்டின் ஒவ்வொரு நாற்றூண்டு வரலாற்றையும் மிக விரிவாக ஆராய்ந்து தொகுதி தொகுதியாக வெளியிட வேண்டும்.*

## XXV. ஆங்கிலத்தில் தமிழ்

1. *ஆங்கில மொழியில் 'தமிழ் இலக்கிய வரலாறு' பற்றிய நடுவுநிலையான கருத்துக்களைக் கொண்ட ஒரு வரலாற்று நூல் வெளி வர அறிஞர் குழு ஒன்று ஏற்பாடு செய்யவேண்டும்.*

2. *அக்குழுவே திட்டமிட்டுத் தமிழ் இலக்கியங்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கும் முயற்சியிலும் முனைய வேண்டும்.*

## XXVI. நூல் நிலையங்கள் வாயிலாக ஆராய்ச்சி

சென்னையில் உள்ள ஆவணக் களரியிலும் தஞ்சைச் சரசுவதி மகால் நூல் நிலையத்திலும் தக்க அறிஞர்களை நிலையாக நியமித்து அவ்வப் போது அந்நிலையங்களில் உள்ள ஆவணங்கள்—நூல்கள் துணைக்கொண்டு புதிய ஆராய்ச்சி நூல்களும் பதிப்புக்களும் பிறவும் வெளி வர ஏற்பாடு செய்ய வேண்டும்.

## XXVII. தட்டெழுத்து—சுருக்கெழுத்து

1. வருங்காலத்தில் நிருவாகத் துறையிலும் பல்கலைக்கழகத்துறையிலும் தமிழின் ஆக்கம் பெருமளவிற்குத் தட்டெழுத்து, சுருக்கெழுத்து வளர்ச்சியைப் பொறுத்துள்ளது.

2. அரசாங்கம் தமிழில் தட்டெழுத்தும் சுருக்கெழுத்தும் பயின்றார்க்கு அலுவலகங்களில் தக்க உயர்வு கிடைக்கும் என்றும், நியமன காலத்தில் சலுகை காட்டப்பெறும் என்றும் அறிவித்தல் வேண்டும்.

## XXVIII. மொழி ஆராய்ச்சி

(மொழி ஆராய்ச்சித் துறையில் ஒரு சில தமிழறிஞர்களேனும் இப்போது முனைந்துள்ளது மகிழ்ச்சிக்குரியது. இத்துறையில் சில முக்கியப் பணிகள் செய்யப் பெற வேண்டும்.)

1. சென்னையில் மொழி ஆராய்ச்சி நிலையம் ஒன்று எல்லா நவீன விஞ்ஞான ஆராய்ச்சிக் கருவி வசதிகளுடனும் ஏற்பட வேண்டும்.

2. இந்நிலையத்தின் சார்பில் ஒரு முத்திங்கள் வெளியீடு (Quarterly) அவ்வப்போது நடைபெறும் ஆராய்ச்சி பற்றிய விவரங்களை அறிவித்தும், மொழி ஆராய்ச்சித் துறையில் அறிவையும் ஆர்வத்தையும் பெருக்கும் கட்டுரைகளை வழங்கியும் பணி புரிய வேண்டும்.

3. 19, 20-ஆம் நூற்றாண்டுகளில் இயற்றியுள்ள தமிழ் நூல்களின் இயல்புகளைக் கூர்ந்து ஆராய்ந்து, இக்குழு, தமிழ் இலக்கணத்தை வளர்ச்சியுறச் செய்ய வேண்டும்.

4. தமிழ் மொழியில் 'குழந்தை மொழி' பற்றிய ஆராய்ச்சி விரிவாக செய்யப் பெற வேண்டும்.

5. தமிழ் மக்களிடையே உள்ள வட்டார மொழி வழக்குகள் உச்சரிப்பு முறைகள் பற்றி ஆராய்ச்சி செய்ய வேண்டும்.

## XXIX. அயல் நாடுகளில் தமிழ் ஆராய்ச்சி

1. அருந்தமிழ் அறிஞர் பெருமக்களைக் கொண்ட இலக்கியம்—கலை ஆராய்ச்சிக் குழு ஒன்று எல்லா வசதிகளுடனும் உலக நாடுகள் முழுவதையும் சுற்றிப் பார்த்து, ஆங்காங்குள்ள பழந்தமிழ்ச் சுவடிகளைப் பிரதி செய்தும் படமெடுத்தும் ஆவன செய்யவும், அச்சுவடிகள் பற்றிய விவரணப் பட்டியல் ஒன்றைத் தயார் செய்து வெளியிடவும் ஏற்பாடு செய்ய வேண்டும்.

2. அக்குழுவே செல்லுமிடந்தோறும் கிடைக்கும் தமிழ் நாட்டுத் தொடர்பு உடைய கலைப்பொருள்களைப் படமெடுத்தும் விலைக்குப் பெறக்கூடியனவற்றைப் பெற்றும் வரவேண்டும்.

3. அரசாங்க ஆதரவில் அருந்தமிழ் அறிஞர்களைக் கொண்ட ஆராய்ச்சிக் குழு ஒன்றைக் கிழக்கு நாடுகட்கு அரசாங்கச் சார்பில் அனுப்பி, அங்குத் தமிழ் நாகரிகம் பரவியுள்ள பான்மையை ஆராய்ந்து, நூல் வடிவில் வெளியிட வேண்டும்.

## XXX. மொழி பெயர்ப்புத் துறை

மிகுந்த கவனத்துடன் இத்துறையில் அரசாங்கமும் பல்கலைக்கழகங்களும் பிற அமைப்புக்களும் இணைந்து திட்டமிட்டுச் செயற்படின், விளையும் நன்மைகள் ஏராளம்.

1. மொழி பெயர்ப்பு நிலையம் (Institute of Translation) ஒன்று நிறுவப்பெற வேண்டும்.

2. இந்த நிலையத்தில் பல்வேறு அறிவியல்—கலைத்துறைகளிலும் புலமை பெற்ற மொழி பெயர்ப்பாளர்கள் நியமிக்கப்பெற வேண்டும்.

3. இம்மொழி பெயர்ப்பாளர்கள் ஏற்கெனவே பல்கலைக்கழகப்படிப்பிற்கு வைக்கப் பெற்றுள்ள ஆங்கில அறிவியல் கலை நூல்களுள் சிறந்தனவற்றை மொழி பெயர்ப்பதில் தங்கள் முயற்சியைத் தொடங்க வேண்டும்.

4. பின்னர் அவ்வப்போது ஆங்கில மொழியில் மட்டுமேனும் வெளிவரும் தலைசிறந்த அறிவியற்கலை நூல்களை மொழி பெயர்க்கும் பணியில் முனைய வேண்டும்.

## XXXI. வானொலிப் பேச்சுக்கள்—நாடகங்கள்

தமிழ் நாட்டு வானொலி நிலையங்களில் பேசப்பெறும் பேச்சுக்கள்—நடிக்கப் பெறும் நாடகங்கள் ஆகியவற்றுள் சிறந்தனவற்றைத் தேர்ந்து, ஆண்டுதோறும் தொகுதி தொகுதியாக வெளியிட வேண்டும்.

## XXXII. தனித்தனி கலைக்களஞ்சியங்கள்

I. (1) தமிழ் மொழி

(2) தமிழ் நாடு

(3) தமிழ் இலக்கியம்

(4) தமிழ்ப் புலவர்கள்

(5) தமிழ்க் கலைகள் ஆகியவைபற்றித் தனித்தனி கலைக்களஞ்சியங்கள் தயாரிக்கப்பட வேண்டும்.

II பல்வேறு துறைகளிலும் வகைகளிலும் இலங்கையில் தமிழ் தனித்தன்மையோடு வளர்ச்சி பெற்றுள்ளது. அதன் பல் துறை வளர்ச்சியைக் காட்டும் வகையில் 'இலங்கைத் தமிழும் தமிழரும்' என்பது பற்றி ஒரு கலைக் களஞ்சியம் தயாரிக்கப் பெற வேண்டும்.

## XXXIII. தமிழ் இலக்கியத் துணைவன்

ஆங்கிலத்தில் வெளியிடப் பெற்றுள்ள 'Companion to English literature' என்பது போன்ற ஒரு நூலைத் தமிழில் வெளியிட வேண்டும். அதில் சிறப்பாகத் தமிழ் இலக்கியங்களில் வரும் கதைக் குறிப்புக்களுக்கு உரிய விளக்கங்கள் அமைய வேண்டும்.

## XXXIV. ஆராய்ச்சிக் கட்டுரைகள் வெளியீடு

தமிழ் நாட்டின் தலை சிறந்த ஆராய்ச்சி அறிஞர் பலர் தாம் அவ்வப்போது எழுதிய கட்டுரைகளை நூல் வடிவில் திரட்டி வெளியிடப் போதிய வசதி இன்றி வாளா இருக்கின்றனர். அவர்தம் கட்டுரைகளைத் தமிழ் ஆராய்ச்சி வளர்ச்சிக் குழு தானாகவோ, தக்கதொரு நிலையம் வாயிலாகவோ வெளியிட ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

## XXXV. மக்கள் இலக்கியம்

(1) தமிழ் நாட்டுப் பழமொழிகள்

(2) தமிழ் நாட்டு விடுகதைகள்

(3) தமிழ் நாட்டு நாடோடிப் பாடல்கள்

(4) தமிழ் நாட்டுப் பாமரர் பகர்ச்சி

இவை தனித்தனி அகராதிகளாகத் தொகுக்கப் பெற வேண்டும்.

## XXXVI. குழந்தை இலக்கியம்

(1) தமிழ் நாட்டுக் குழந்தைகட்குப் பயன்படும் வகையில் மேல் நாடுகளில் வெளியிடப் பெற்றுள்ளது போல, பல்வேறு துறைகளிலும் வண்ணப்படங்களோடு கூடிய அழகிய எளிய நூல்கள் குறைந்த விலையில் வெளிவர, தனிக் குழு அமைத்து ஆவன புரிய வேண்டும்.

(2) முக்கியமாகக் குழந்தைகட்கெனத் தனிக் 'கலைக்களஞ்சியம்' விரைவில் வெளிவர ஏற்பாடு செய்ய வேண்டும்.

## XXXVII. இதழாராய்ச்சி

தமிழ்த் தொடர்புடையனவாய் கடந்த காலத்தில் தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளி வந்துள்ள இதழ்கள் பாதுகாத்து ஆராயப் பெறவேண்டும். சிறப்பாக (1) அச்சுக்கலை வரலாறு (2) இதழ்களால் மொழியும் இலக்கிய மும் பெற்ற வளர்ச்சி (3) மொழி-நாடு பற்றிய சிறப்புடைய செய்திகள் என்ற தலைப்பில் ஆராய்ச்சி நடைபெறவேண்டும். இந்த ஆராய்ச்சிக்கு என்று தனி நிறுவனம் தோன்ற வேண்டும்.

## XXXVIII. படத் தொகுப்பு

தமிழ் நாட்டின் பல்வேறு ஊர்களையும் காட்சிகளையும் விளக்கும் அழகிய படங்கள் பல அரசாங்க மாளிகைகளிலும் ஆங்கில அறிஞர் களின் வரலாற்று நூல்களிலும் காட்சி அளிக்கின்றன. அவை யாவும் தொகுக்கப் பெற்று விளக்கக் குறிப்புக்களுடன் தனி நூலாக வெளியிடப் பெறவே'ண்டும்.

## XXXIX. நாடும் ஊரும்

நம் தாயகமும் தாயகத்து ஊர்களும் தமிழ் மணங் கமழும் பேர்களுடன் திகழ வேண்டும்.

1. 'சென்னை இராஜ்யம்' 'தமிழ் நாடு' ஆதல் வேண்டும்.

2. தமிழ் நாட்டு ஊர்ப்பெயர்களில் 'ஸ்ரீ' 'திரு' ஆதல் வேண்டும்.

3. பொருள் சிதைந்து வழங்கும் ஊர்ப் பெயர்கள் பொருள் பொதிந்தனவாய் உருப் பெறுதல் வேண்டும்.

4. தமிழ்ப் பெயர்கட்குச் சரியான உச்சரிப்புடைய ஆங்கிலப் பெயர்களை வழங்க வேண்டும்.

## XL. ஆராய்ச்சி மாநாடுகள்

வரலாறு, விஞ்ஞானம், கிழக்கு நாட்டுக் கல்வி முதலியன பற்றி அனைத்திந்திய அடிப்படையில் ஆராய்ச்சி மாநாடுகள் நடைபெறுவது போல தமிழ் ஆராய்ச்சி மாநாடுகள் ஆண்டு தோறும் நடை பெற வேண்டும். அதன் செயல் முறைகள் நூலுருவில் வெளியிடப்பெறவேண்டும். சிறப்பாக அம்மாநாட்டில் படிக்கப் பெறும் ஆராய்ச்சிக் கட்டுரைகள் நூல்வடிவில் வெளியிடப் பெறவேண்டும்.

Wrapper Printed at Neo Art Press, Madras - 2